நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவையாறு

முன்னிலை: **திரு.து.ஹரிராம், பிகாம்,பி.எல்.,**
**நீதித்துறை நடுவர்,திருவையாற**

வாக்குமூலம்

**திருவையாறு நீதித்துறை நடுவர் நீதிமன்றம்**

வழக்கு எண்.**CC. 298 /2021**

வழக்கு சாட்சி- **அ.சா.4**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | சதீஷ்குமார் | : | ஜாதி | |
| தந்தை /கணவர் பெயர் | தெட்சிணாமூர்த்தி | : | தொழில் | விவசாயம் |
| கிராமம் | கடயக்குடி | : | சமயம் | |
| தாலுக்கா | பூதலூர் | : | வயது | 52 /2024 |

( எதிரி ஆஜர் )

**நாள் : 08.02.2024**

**முதல் விசாரணை:**

**1)** நான் கடயக்குடியில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. அ.சா.1 ஐ தெரியும். இவ்வழக்கு விபத்தில் இறந்துபோன சின்னதுரையை தெரியும். கடந்த 19.01.2020 ஆம் தேதியன்று மாலை 04.00 மணி அளவில் அ.சா.1, அவரது கணவர் மற்றும் மகனுடன் அடஞ்சூர் சென்றுவிட்டு திரும்ப வந்தபோது புள்ளவாய்க்கால் கரை அருகே எதிரே வந்த இரு சக்கர வாகனம் மோதியதில் விபத்து ஏற்பட்டது. அ.சா.1 க்கு லேசான காயங்கள் ஏற்பட்டிருந்தது. அவரது மகனுக்கு தலையில் அடிபட்டிருந்தது. மூக்கில் இரத்தம் வந்தது. மூவரையும் ஆம்புலன்ஸ்மூலம் திருக்காட்டுப்பள்ளி அரச மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். அங்கு சின்னதுரையை பரிசோதித்துவிட்டு வரும் வழியிலேயே இறந்துவிட்டதாக சொன்னார். போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

எதிரிதரப்பு குறுக்கு விசாரணை இல்லை.

**(ஒம்./-திரு. து.ஹரிராம், பி.காம், பி.எல்.,**

நீதித்துறை நடுவர், திருவையாறு)